துணைப் போக்குவரத்து ஆணையர், திருநெல்வேலி அவர்களின்
செயல்முறை நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் : திரு.ஜே.ஜே. பிரசன்னா, M.A., D.M.E., B.Tech., M.B.A.,

செ.மு.ஆ. எண்.728/அ3/2017 (ப.ஆ.எ்ண். 139/2017) நாள் : 21.11.2017

பொருள் : பணியமைப்பு - போக்குவரத்துத் துறை - திருமதி. மு. சிவசங்கரி, தட்டச்சர் - தகுதிகாண் பருவம் நிறைவு செய்தது - உத்திரவு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1) போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 42036/R2/14, (ப.ஆ.எண்.477/2014), நாள் : 05.12.14
2) அரசாணை எண்.எம்.எஸ்.608, உள்(போ.4) துறை, நாள் : 26.05.08.
3) போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 42036/R2/14, (ப.ஆ.எண்.148/2016), நாள் : 16.06.16
4) முதன்மை செயலர் / போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்.25890-R4-2017 (ப.ஆ.எண்.575/2017), நாள் : 26.10.2017

- - - - -

ஆணை :

பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, திருநெல்வேலி துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி மு. சிவசங்கரி அவர்களது பணியானது, 24.12.2014 முற்பகல் முதல் வரன்முறை செய்து, பார்வை 3-ல் காணும் போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி உத்திரவிடப்பட்டுள்ளது.

தனியர் 03.05.2016 முதல் 12.05.2016 வரை 10 நாட்கள் மருத்துவ விடுப்பும் மற்றும் 06.09.2016 முதல் 01.06.2017 வரை 269 நாட்கள் மகப்பேறு விடுப்பும் ஆக மொத்தம் 279 நாட்கள் விடுப்பு துய்த்துள்ளார். எனவே இவர் மூன்றாண்டுகள் தொடர்பணியில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தினை 28.09.2017 பிற்பகலில் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளார். இந்த இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தில் இவர் மீது எவ்விதமான குற்றச்சாட்டுக்களோ, ஒழுங்கு நடவடிக்கைகளோ பதிவு செய்யப்படவில்லை.

எனவே, திருமதி. மு. சிவசங்கரி, தட்டச்சர் அவர்கள் 28.09.2017 பிற்பகலில் தமது இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்துள்ளார் என்று உத்திரவு வழங்கப்படுகிறது. தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளும் செய்யப்படுகிறது.

21/11/17

துணைப்போக்குவரத்து ஆணையர்,
திருநெல்வேலி.

பெறுநர்

திருமதி. மு. சிவசங்கரி,
தட்டச்சர்,
துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம்,
திருநெல்வேலி.

21/11/17

நகல் :

1. போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. பணியமைப்பு ஆணைப் புத்தகம்.